# Office of the Prime Minister
# Transnational Government of Tamil Eelam
# நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்
# பிரதம அமைச்சரின் அலுவலகம்

875 Avenue of the Americas, Suite 906
New York, NY 10001, USA

www.tgte.org
pmo@tgte.org


மே 08, 2017

அன்புடையீர்

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் முதற்கண் எனது வணக்கத்தைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்றாவது முள்ளிவாய்க்கால் நினைவுப் பேருரை மே மாதம் 18ந் திகதியும் அதனைத் தொடர்ந்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் இரண்டாவது அரசவையின் ஏழாவது நேரடி அமர்வு இம்மாதம் மே 19 முதல் 21 வரையிலான நாட்களில் தாங்கள் வாழும் லொஸ் ஏஞ்சலெஸ் பெருநகரில் இடம் பெறுகிறது.

இந்த அமர்வில் தங்கள் அமைப்பின் சார்பில் ஒருவர் பங்குகொண்டு தங்கள் தோழமையுணர்வை வெளிப்படுத்துவது ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்துக்குவலுச் சேர்க்கும் என நாம் உறுதியாகக் கருதுகிறோம்.

எமது இந்த அமர்வின் முதலரங்கில் **“சிறிலங்காவின் அரச கட்டமைப்புக்குள் தமிழர் உரிமை சாத்தியமா?”**என்ற கருப்பொருளில் கருத்தாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. இதனைவிட மேலும் இரு பேசுபொருள்களை அமர்வு கவனத்துக்கு எடுத்துக் கொள்ளவுள்ளது. **பல்பரிமாண ஒழுங்காக மாறிவரும் உலக அரசியல் ஒழுங்கு ஈழத் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு சாதகமான வாய்ப்புகளைத் தருமா** என்பது குறித்து நாம் உரையாடவுள்ளோம். **தமிழ் மக்களை உலகஅரங்கில் ஒருவலுமையமாக உருவாக்குவது** குறித்து சிந்தனையும் உரையாடலும் இவ் அமர்வில் இடம் பெறவுள்ளன.

மேலும் 19ம் திகதி மாலை 6:30 – 8:30 வரை லொஸ் ஏஞ்செலஸ் மக்களுடன் Town Hall Meeting ஒன்றும் நடைபெறும்.

இத்தகைய விடயங்களை ஆராயும் இம் அமர்வில் தங்கள் அமைப்பும் பங்குபற்றிக் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது முக்கியம் வாய்ந்ததெனவும் ஆக்க பூர்வமானதெனவும் நாம் கருதுகிறோம். எமது இவ் அழைப்பைத் தாங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் எனவும் உறுதியாக நம்புகிறோம்.

மேலும் இவ் அழைப்பினை உங்கள் உறுப்பினர்கள் அனைவருக்கும் நண்பர்களுக்கும் தெரியப் படுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ் அமர்வு தொடர்பாகவும் தங்கள் பங்குபற்றல் தொடர்பாகவும் மேலதிக தகவல் ஏதும் தேவைப்படின் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கலிபோர்னியா உறுப்பினர் திரு. விக்டர் ராஜலிங்கத்துடன் பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் அல்லது மின் அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டிக் கொள்கிறேன்.

தொலைபேசி இலக்கம்: (562)-342-3002
மின் அஞ்சல் முகவரி: 4victorraja@gmail.com

Events:

1. Third Mullivaaikaal Memorial Lecture: ***Human rights: Seismic power against repressive regimes*** by Dr. Alush Gashi (Political Advisor to the former and first president of Kosova, Ibrahim Rugova).

Time: May 18, 2017 6:30 pm to 8:30 pm

Venue: UCLA Royce Hall Room 190

2. Opening Ceremony of the 7th Sitting of the 2nd Parliamentary Session of the TGTE.

Time: May 19, 2017 9:00 am to 1:00 pm

Venue: Holiday Inn (9901 S La Cienega Blvd, Los Angeles, CA 90045)

3. Town Hall Meeting

Time: May 19, 2017 6:30 pm to 8:30 pm

Venue: Holiday Inn (9901 S La Cienega Blvd, Los Angeles, CA 90045)

நன்றி

வி. உருத்திரகுமாரன்

ருத்ரா